# முதியோர் கல்வி

## முதல் நூல்



கல்வித் துறை வெளியீடு

# முதியோர் கல்வி

முதல் நூல்

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 2281
நன்கொடை எண்: 2281

நெ. து. சுந்தரவடிவேலு

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை.

கல்வித் துறை வெளியீடு


# முன்னுரை

கல்வி நம் பிறப்புரிமை. அதைப் பெருதவர் பலர். அவர்கள் என்றும் அப்படியே இருக்க வேண்டுமா? கூடாது. அது அவர்களுக்கும் நல்லதன்று. சமுதாயத்திற்கும் நல்லதன்று. நாட்டிற்கும் நல்லதன்று. எனவே முதியோரும் எழுத்தறிவு பெற வேண்டும்.

முதியோர் எழுத்தறிவு அவரது தொழிலுக்குத் துணையாக வேண்டும். அது படிப்பில் ஆர்வத்தை ஊட்ட வேண்டும். வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டும்.

முதியோர் பாடநூல் தனியாக அமைதல் நல்லது. அதற்கு முன்னோடியாக இந்நூல் வெளியிடப் படுகிறது.

காக்ஸ்டன் அச்சகம், சென்னை - 1.



## பாடம் 1

# இவர் யார்?

இவர் **ஆறுமுகம்.**

ஆறுமுகம் **உ**ழவர்.

ஆறுமுகம் உழை**ப்**பாளர்.

ஆறுமுகம் ந**ல்**லவர்.

இவர் ஊர் **அ**கரம்.

அகரம் அழகான **ஊ**ர்.

உயிர்: **அ, ஆ, உ, ஊ**

மெய்: **ப், ம், ர், ல்**

உயிர்மெய்: **ப, பா, பு, பூ**

**ம, மா, மு, மூ**

**ர, ரா, ரு, ரூ**

**ல, லா, லு, லூ**

**1 2 3 4 5 6 7 8 9 10**



பாடம் 2

## குடும்பம்

ஆறுமுகம் மனைவி வள்ளி.

அவர் மகன் இளங்கோ.

அவர் மகள் ஔவை.

மக்கள் இருவர் படிக்கிறார்கள்.

ஔவை ஊரில் படிக்கிறாள்.

இளங்கோ கோவையில் படிக்கிறான்.

வள்ளி வயலில் உழைக்கிறாள் ;

சிக்கனமாக வீட்டை நடத்துகிறாள்.


அவர்கள் சீராக வாழ்கிறார்கள்.

உயிர் : இ, ஔ

மெய் : க், ங், ட், த், ழ், ள், ன்

உயிர்மெய் : கி, கௌ | ழி, ழௌ
ஙி, ஙௌ | ளி, ளௌ
டி, டௌ | னி, னௌ
தி, தௌ

11 12 13 14 15 16 17 18 19 20



பாடம் 3


## சொத்து

ஆறுமுகம் சொத்து உடையவர்;
நன்செய் புன்செய் உடையவர்.
ஐந்து ஏக்கர் நன்செய்.
மூன்று ஏக்கர் புன்செய்.
ஓட்டு வீடு உண்டு.
ஆள் அம்பு உண்டு.
கறவை மாடு உண்டு.
தோட்டம் துரவு உண்டு.
இரண்டு ஏர் உண்டு.
வங்கியில் பணம் உண்டு.
விளைச்சலைப் பெருக்க முயன்றார்.

உயிர் : ஏ, ஐ, ஓ
மெய் : ச், ண், ந், ய்

உயிர்மெய் : சே, சை, சோ
ணே, ணை, ணோ
நே, நை, நோ
யே, யை, யோ

21 22 23 24 25 26 27 28 29 30



பாடம் 4

## பயிர்


ஆறுமுகம் ஆழ உழுதார்.
ஏழு உழவு உழுதார்.
முதல் உழவு தரிசு உழவு.
இரண்டாம் உழவு இரட்டிப்பு.
மூன்றும் உழவு முச்சாலிப்பு.
நான்காம் உழவு நடவுழவு.
பருவத்தில் நட்டார்.
ஐ. ஆர். 8 நாற்று நட்டார்.
ஒன்பது பெண்கள் நட்டார்கள்.
வள்ளியும் சேர்ந்து நட்டாள்.

உயிர் : ஒ

மெய் : ற்

உயிர்மெய் : றே

**31 32 33 34 35 36 37 38 39 40**



## பாடம் 5

# புன்செய்ப் பயிர்

பருவத்தில் மழை பெய்தது.
புன்செயில் ஈரம் நின்றது.
ஈரம் பார்த்து உழுதார் ஆறுமுகம் ;
எல்லா நிலமும் உழுதார்.
மக்காச் சோளம் விதைத்தார்.
நரிப்பயறு, துவரை, விதைத்தார்.
தட்டை மொச்சை விதைத்தார்.
ஒவ்வொன்றும் விளைந்ததும் அறுத்தார்.
விளைந்தவை வீட்டிற்கு ஆயின.
ஓர் ஏக்கரில் எள் விதைத்தார்.
எள் ஏராளமாய் விளைந்தது ;
வீட்டுத் தேவைக்குமேல் விளைந்தது.
மிஞ்சியதை விலைக்கு விற்றார்.
வந்த பணத்தை வங்கியில் போட்டார்.
ஆறுமுகத்தை ஊரார் மதித்தனர்.

உயிர் : ஈ, எ — உயிர் மெய் : ஞீ, ஞெ

மெய் : ஞ், வ் — வீ, வெ

**41 42 43 44 45 46 47 48 49 50**




பாடம் 6

## வீட்டுத் தோட்டம்

வள்ளி வீட்டில் தோட்டம் உண்டு.
அது காய்கறித் தோட்டம்.
ஆடிப் பதினெட்டு வந்தது.
வள்ளி, ஔவையை அழைத்தாள்.
வகை வகையான விதைகளைக் கொடுத்தாள்.
விரைந்து ஊன்றினாள் ஔவை.
எல்லாக் குழிகளிலும் ஊன்றினாள் ஔவை.
நாள் பல சென்றன.
கண்போலக் காத்தனர் இருவரும்.
கீரை பாத்தியில் முளைத்தது.
புடலை, பந்தலில் தொங்கிற்று.
பூசனி, ஓரத்தில் படர்ந்தது.
சுரை, ஓட்டின் மேல் படர்ந்தது.
அவரை, பந்தலில் காய்த்தது.
கத்தரி, நிரம்பக் காய்த்தது.
மூலையில் முருங்கை மரம்.
மரம் நிரம்பக் காய்கள்.
வாழை செழித்து வளர்ந்தது.

**51 52 53 54 55 56 57 58 59 60**



பாடம் 7

## கறவை மாடு


ஆறுமுகத்திடம் ஆறு எருமைகள் இருந்தன. அவை காலை மாலை பால் கறக்கும். ஒவ்வொன்றும் வேளைக்கு மூன்று லிட்டர் பால் தரும்.

வள்ளி, மாடுகளைப் பராமரிப்பாள். தீனி போடுவாள். சோளத் தட்டை, கடலைக் கொடி கலந்து போடுவாள். பச்சைப்புல், வைக் கோல் வைப்பாள். தவிடு போட்டுத் தண்ணீர் காட்டுவாள். அவளே பாலும் கறப்பாள். தொழுவத்தைக் கழுவுவாள்.

ஔவைக்கு எருமைக்கன்றுகள்மேல் உயிர். அவற்றைக் குளிப் பாட்டுவாள், தேய்ப்பாள், காணன் பறித்துப் போடுவாள். அவற்றைத் துரத்தி விளையாடுவாள். அவை கொழுகொழுவென்று இருந்தன.

பால் உடம்பிற்கு ஏற்றது. ஆறுமுகம் வீட்டில் அனைவரும் பால் குடிப்பர். மீதியைத் தயிராக்குவாள் வள்ளி. அன்றுடம் தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பாள். வெண்ணெயை உருக்கி நெய் யாக்குவாள். நெய்யைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் விற்பாள். விற்ற பணத்தை வங்கியில் போடுவாள்.

61 62 63 64 65 66 67 68 69 70



பாடம் 8


## கூட்டுறவு விற்பனைச் சங்கம்

அகரத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கம் உண்டு. அச் சங்கத்தில் பொறுக்கு விதை, உரம், பூச்சி கொல்லி மருந்து கிடைக்கும். ஊரில் விளையும் தானியங்களை அதன் மூலம் விற்பர்.

சங்கத்தின் தலைவர் ஆறுமுகம். சங்க வேலையைச் சொந்த வேலையாகக் கவனிப்பார். கணக்கில் கண்ணுங்கருத்துமாய் இருப்பார். எல்லோரிடமும் இனிமையாய்ப் பேசுவார். உறுப்பினர்களைக் கலந்தே செயல் புரிவார். எனவே, ஊராருக்கு நம்பிக்கை வளர்ந்தது. பலரும் உறுப்பினர் ஆயினர்.

கொள்வன கொடுப்பன பெருகின. இலாபம் பெருகிற்று. அதில் ஒரு பங்கைப் பொதுநலநிதிக்கு ஒதுக்கினர். மீதியை உறுப்பினர் பிரித்துக் கொண்டனர். ஆதாயம் அதிகமாயிற்று. அதைப் பார்த்துப் பக்கத்து ஊர்களிலும் விற்பனைச் சங்கங்களைத் தொடங்கினர்.

71 72 73 74 75 76 77 78 79 80



## பாடம் 9

# ஊராட்சி

அசரத்தில் ஊராட்சி மன்றம் உண்டு. அதற்கு ஒன்பது பேர் உறுப்பினர். வள்ளியும் ஓர் உறுப்பினள்.

ஊர்ப் பொதுவேலைகள் ஊராட்சி மன்றத்தின் பொறுப்பு. தெருக்களில் குழி, பள்ளங்களைத் தூர்த்தனர். தெருவின் இரு பக்கங்களிலும் தென்னையை நட்டனர். வீதியில் விளக்குப் போட்டனர். நாள்தோறும் தெருவில் குப்பை கூட்ட ஏற்பாடு செய்தனர்.

குடிநீர்க் குளத்திற்குக் காவல் போட்டனர். ஆடு மாடுகளைக் கழுவாது தடுத்தனர். மனிதர்கள் குளிப்பதையும், துணி துவைப்பதையும் நிறுத்தினர். அவ்வப்போது தண்ணீரைத் தூய்மைப் படுத்தினர்.

குளத்திலிருந்து குழாய் அமைத்தனர். ஊர் மக்கள் வெளியே இருந்து குழாய்களில் தண்ணீர் பிடித்துக்கொள்வர். குழாயடியைச் சுத்தமாக வைக்க ஏற்பாடு செய்திருந்தனர்.

உள்ளூர்ப் பள்ளியில் பகல் உணவு தரப்பட்டது. ஊராட்சி மன்றத்திற்கு அதில் அக்கறை அதிகம். வள்ளி தனிப்பொறுப்புடன் அதை மேற்பார்வை செய்தாள்.

குப்பை கூளம் ஒழிந்தன. கொசுத்தொல்லை குறைந்தது. நோய் நொடியும் குறைந்தன. சுத்தம் சுகம் தரும் என்று உணர்ந்தனர்.

**81 82 83 84 85 86 87 88 89 90**

# பொங்கல் விழா

தை முதல் நாள் பொங்கல் நாள். அன்று மகிழ்ச்சி பொங்கும் நாள். பொங்கல் விழா, தமிழர் திருநாள் உழவுக்கு வந்தனை செய்யும் நாள்.

தை நெருங்கிற்று. பொங்கல் வேலை தொடங்கிற்று. ஆறுமுகம் சுண்ணம்பு வாங்கி வந்தார். வெள்ளையடிக்க ஏற்பாடு செய்தார்.

ஆறுமுகமும், வள்ளியும், ஔவையும் துணிக்கடைக்குச் சென்றனர். பள்ளிக்கூடச் சீருடையே வேண்டுமென்று ஔவை அடம் பிடித்தாள். விரும்பிய படியே பாவாடை, சொக்காய்த் துணி எடுத்தனர். ஆறுமுகம் வள்ளிக்கு இரண்டு கைத்தறிச் சேலை எடுத்தார். இளங்கோவுக்குப் புத்தாடை எடுத்தார். தமக்கும் இரு வேட்டியும், இரு துண்டும் எடுத்துக்கொண்டார்.



பொங்கல் நாள் வந்தது. வள்ளி அதிகாலையில் எழுந்தாள். வீட்டைப் பெருக்கினாள் ; மெழுகினாள் ; கோலம் இட்டாள்.

புதுப்பானையில் புத்தரிசிப் பொங்கல் இட்டாள் ; காய்கறிகளைச் சமைத்தாள். ஔவைக்கு ஒரே மகிழ்ச்சி! இளங்கோவும் பொங்கலுக்கு முன்னரே வந்துவிட்டான்.

பொங்கல் ஆனதும் படைத்தனர். பிறகு மூவருக்கும் பரிமாறினாள் வள்ளி. சேர்ந்து உண்டு, மகிழ்ந்தார்கள். உண்டதும், அண்ணனும் தங்கையும் கரும்பை எடுத்தனர். போட்டி போட்டு மென்று சுவைத்தனர். நாளெல்லாம் இன்பமாயிருந்தது.

**91 92 93 94 95 96 97 98 99 100**


பாடம் 11

## எண்கள்

| | | | |
|---|---|---|---|
| ஒன்று | 1 | இருபத்தாறு | 26 |
| இரண்டு | 2 | இருபத்தேழு | 27 |
| மூன்று | 3 | இருபத்தெட்டு | 28 |
| நான்கு | 4 | இருபத்தொன்பது | 29 |
| ஐந்து | 5 | முப்பது | 30 |
| ஆறு | 6 | முப்பத்தொன்று | 31 |
| ஏழு | 7 | முப்பத்திரண்டு | 32 |
| எட்டு | 8 | முப்பத்துமூன்று | 33 |
| ஒன்பது | 9 | முப்பத்துநான்கு | 34 |
| பத்து | 10 | முப்பத்தைந்து | 35 |
| பதினொன்று | 11 | முப்பத்தாறு | 36 |
| பன்னிரண்டு | 12 | முப்பத்தேழு | 37 |
| பதின்மூன்று | 13 | முப்பத்தெட்டு | 38 |
| பதினான்கு | 14 | முப்பத்தொன்பது | 39 |
| பதினைந்து | 15 | நாற்பது | 40 |
| பதினாறு | 16 | நாற்பத்தொன்று | 41 |
| பதினேழு | 17 | நாற்பத்திரண்டு | 42 |
| பதினெட்டு | 18 | நாற்பத்துமூன்று | 43 |
| பத்தொன்பது | 19 | நாற்பத்துநான்கு | 44 |
| இருபது | 20 | நாற்பத்தைந்து | 45 |
| இருபத்தொன்று | 21 | நாற்பத்தாறு | 46 |
| இருபத்திரண்டு | 22 | நாற்பத்தேழு | 47 |
| இருபத்துமூன்று | 23 | நாற்பத்தெட்டு | 48 |
| இருபத்துநான்கு | 24 | நாற்பத்தொன்பது | 49 |
| இருபத்தைந்து | 25 | ஐம்பது | 50 |

| | |
|---|---|
| ஐம்பத்தொன்று | 51 |
| ஐம்பத்திரண்டு | 52 |
| ஐம்பத்துமூன்று | 53 |
| ஐம்பத்துநான்கு | 54 |
| ஐம்பத்தைந்து | 55 |
| ஐம்பத்தாறு | 56 |
| ஐம்பத்தேழு | 57 |
| ஐம்பத்தெட்டு | 58 |
| ஐம்பத்தொன்பது | 59 |
| அறுபது | 60 |
| அறுபத்தொன்று | 61 |
| அறுபத்திரண்டு | 62 |
| அறுபத்துமூன்று | 63 |
| அறுபத்துநான்கு | 64 |
| அறுபத்தைந்து | 65 |
| அறுபத்தாறு | 66 |
| அறுபத்தேழு | 67 |
| அறுபத்தெட்டு | 68 |
| அறுபத்தொன்பது | 69 |
| எழுபது | 70 |
| எழுபத்தொன்று | 71 |
| எழுபத்திரண்டு | 72 |
| எழுபத்துமூன்று | 73 |
| எழுபத்துநான்கு | 74 |
| எழுபத்தைந்து | 75 |

| | |
|---|---|
| எழுபத்தாறு | 76 |
| எழுபத்தேழு | 77 |
| எழுபத்தெட்டு | 78 |
| எழுபத்தொன்பது | 79 |
| எண்பது | 80 |
| எண்பத்தொன்று | 81 |
| எண்பத்திரண்டு | 82 |
| எண்பத்துமூன்று | 83 |
| எண்பத்துநான்கு | 84 |
| எண்பத்தைந்து | 85 |
| எண்பத்தாறு | 86 |
| எண்பத்தேழு | 87 |
| எண்பத்தெட்டு | 88 |
| எண்பத்தொன்பது | 89 |
| தொண்ணூறு | 90 |
| தொண்ணூற்றொன்று | 91 |
| தொண்ணூற்றிரண்டு | 92 |
| தொண்ணூற்றுமூன்று | 93 |
| தொண்ணூற்றுநான்கு | 94 |
| தொண்ணூற்றைந்து | 95 |
| தொண்ணூற்றாறு | 96 |
| தொண்ணூற்றேழு | 97 |
| தொண்ணூற்றெட்டு | 98 |
| தொண்ணூற்றொன்பது | 99 |
| நூறு | 100 |




பாடம் 12

# தக்காண மக்காச்சோளம்

ஆறுமுகம் மக்காச்சோளம் விதைக்க விரும்பினர். விதைப்பதற்குமுன், ஊர்ப்பணியாளரைக் கலந்தார். அவர் தக்காண மக்காச் சோளத்தைச் சிபாரிசு செய்தார். காரணம், இது ஒட்டு வீரியச் சோளம். இந்தச் சோளப்பயிர் நோய் வந்தாலும் தாங்கும்.


ஆறுமுகம் ஓர் ஏக்கர் நிலத்தை ஐந்து உழவு உழுதார். மண் கட்டிகளை உடைத்துப் பண்படுத்தினர். இருபது வண்டி தொழு உரம் போட்டார்.

ஆறு கிலோப் பொறுக்கு விதை வாங்கி வந்தார். விதை இடும் போதும் உரமிடும்படி விவசாய விளக்குனர் கூறினர். அவ்வாறே பன்னிரண்டு கிலோத் தழைச்சத்தும், இருபத்துநான்கு கிலோத் தானியச் சத்தும், பதினெட்டுக் கிலோச் சாம்பல் சத்தும் போட்டார்.

வரிசைக்கு வரிசை 75 செ. மீ. இடைவெளி விட்டார். விதைக்கு விதை 20 செ. மீ. விட்டு, 3·75 செ. மீ. ஆழத்தில் விதை ஊன்றினர். ஒரு வாரத்தில் முளை வந்தது. அப்புறம் இரண்டுவாரங் கழித்துக் களை எடுத்தார். தண்ணீர் இன்றிப் பயிர் வாடாமல் பார்த்துக் கொண்டார்.

நாற்பத்தைந்தாம் நாள், 12 கிலோத் தழைச் சத்தைப் போட்டார். மறுபடியும், மகரந்த நார்கள் உருவாகும்போது 12 கிலோத் தழைச் சத்தை இட்டார். நோய்தடுப்பு முறையைக் கையாண்டார். பத்து செ. மீ. பயிராய் இருக்கும்போது எண்டிரின் மருந்து தெளித்தார். மறுபடியும் பத்து நாள்களுக்கு ஒருமுறை மருந்து தெளித்தார்.

நூறு நாள் ஆன பின் அறுத்தார். 4,500 கிலோ விளைச்சல் கிடைத்தது. நிரம்பக் கிடைத்தது என்று எல்லோரும் பாராட்டினர்.





பாடம் 13

## கடிதம்

ஆறுமுகம்,
தலைவர்,
கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

அகரம் அஞ்சல்,
19-1-1969.

அன்புடையீர்,
வணக்கம்.

எங்கள் விற்பனைச் சங்கம் இருபத்தைந்து ஆண்டுகளாய் நடக்கிறது. அதன் நற்பணியைத் தாங்கள் அறிவீர்கள். இரண்டொரு முறை பாராட்டியும் இருக்கிறீர்கள்.

இச்சங்கத்தின் வெள்ளி விழாவை அடுத்த மாதம் நடத்த எண்ணியுள்ளோம். அதற்குத் தக்க தலைவர் வேண்டும். தாங்களே தக்கவர்கள் என்பது சங்கத்தின் முடிவு. தயவுசெய்து இவ்வழைப்பினை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். தங்கள் வருகை எங்களுக்குப் பெருமை தரும். பணியினுக்கு ஊக்கமூட்டும். ஆகவே, தங்கள் வசதிப்படி நாள் குறிக்கும்படி வேண்டுகிறோம்.

அன்புள்ள,
ஆறுமுகம்.

திரு. மலைச்சாமி,
கூட்டுறவுச் சங்கத் துணைப்பதிவாளர்,
கோவை.

பாடம் 14

## எண்கள்

| | | | |
|---|---|---|---|
| நூறு | 100 | இருபதாயிரம் | 20,000 |
| இருநூறு | 200 | முப்பதாயிரம் | 30,000 |
| முந்நூறு | 300 | நாற்பதாயிரம் | 40,000 |
| நானூறு | 400 | ஐம்பதாயிரம் | 50,000 |
| ஐந்நூறு | 500 | அறுபதாயிரம் | 60,000 |
| அறுநூறு | 600 | எழுபதாயிரம் | 70,000 |
| எழுநூறு | 700 | எண்பதாயிரம் | 80,000 |
| எண்ணூறு | 800 | தொண்ணூறாயிரம் | 90,000 |
| தொள்ளாயிரம் | 900 | லட்சம் | 1,00,000 |
| ஆயிரம் | 1,000 | பத்து லட்சம் | 10,00,000 |
| இரண்டாயிரம் | 2,000 | இருபது லட்சம் | 20,00,000 |
| மூவாயிரம் | 3,000 | முப்பது லட்சம் | 30,00,000 |
| நான்காயிரம் | 4,000 | நாற்பது லட்சம் | 40,00,000 |
| ஐயாயிரம் | 5,000 | ஐம்பது லட்சம் | 50,00,000 |
| ஆறாயிரம் | 6,000 | அறுபது லட்சம் | 60,00,000 |
| ஏழாயிரம் | 7,000 | எழுபது லட்சம் | 70,00,000 |
| எண்ணாயிரம் | 8,000 | எண்பது லட்சம் | 80,00,000 |
| ஒன்பதாயிரம் | 9,000 | தொண்ணூறு லட்சம் | 90,00,000 |
| பத்தாயிரம் | 10,000 | கோடி | 1,00,00,000 |

## பாடம் 15

# கூட்டல்

1. மங்கம்மாளிடம்

| | |
|---|---|
| கைத்தறிச் சேலை | 4 |
| பட்டுச் சேலை | 2 |
| மொத்தம் | |

2. இராமசாமியிடம்

| | |
|---|---|
| கறுப்புக்கரை வேட்டி | 2 |
| பச்சைக்கரை வேட்டி | 4 |
| சிவப்புக்கரை வேட்டி | 3 |
| மொத்தம் | |

3. கோவிந்தனிடம்

| | |
|---|---|
| சேவல்கள் | 2 |
| பெட்டைக்கோழிகள் | 8 |
| மொத்தம் | |

4. குப்பனிடம்

| | |
|---|---|
| செம்மறி ஆடுகள் | 6 |
| வெள்ளாடுகள் | 4 |
| மொத்தம் | |

5. வேலனிடம்

| | |
|---|---|
| பசுக்கள் | 7 |
| எருதுகள் | 6 |
| ஆடுகள் | 3 |
| மொத்தம் | |

6. முருகன் தோட்டத்தில்

| | | |
|---|---|---|
| மாமரம் | 5 | |
| தென்னை | 9 | |
| கொய்யா | 3 | |
| பலா | 1 | |
| மொத்தம் | | |

7. பழனியிடம்

| | | |
|---|---|---|
| நன்செய் | 12 | ஏக்கர் |
| புன்செய் | 8 | ,, |
| மொத்த நிலம் | | ,, |

8. வள்ளியின் வீட்டுத் தோட்டத்தில் விளைந்தவை.

| | | |
|---|---|---|
| கத்தரிக்காய் | 9 | கிலோ |
| வெண்டைக்காய் | 6 | ,, |
| அவரைக்காய் | 4 | ,, |
| பாகற்காய் | 1 | ,, |
| மொத்தம் | | ,, |

9. ஆறுமுகத்தின் கோழிப்பண்ணையில்

| | | |
|---|---|---|
| முதல் நாள் கிடைத்தவை | 10 | முட்டைகள் |
| இரண்டாம் நாள் கிடைத்தவை | 20 | ,, |
| மூன்றும் நாள் கிடைத்தவை | 15 | ,, |
| மொத்தம் | | ,, |

10. முனிசாமிக்குக் கிடைத்த மொத்தம்

| | | |
|---|---|---|
| ஒட்டு வீரிய மக்காச்சோள விளைச்சல் | 30 | குவிண்டால் |
| ராகி விளைச்சல் | 25 | ,, |
| கம்பு விளைச்சல் | 15 | ,, |
| மொத்தம் | | ,, |

11. இராமனின் கோழிப்பண்ணையில் 40 முட்டைகள்

| | | |
|---|---|---|
| இராமனின் கோழிப்பண்ணையில் | 40 | முட்டைகள் |
| முத்துவின் கோழிப்பண்ணையில் | 25 | ,, |
| பாலுவின் கோழிப்பண்ணையில் | 35 | ,, |
| மொத்தம் | | ,, |

12. நெல் விளைச்சல்

| | | |
|---|---|---|
| ஐ. ஆர். 8 | 40 | குவிண்டால் |
| ஆடுதுறை 27 | 60 | ,, |
| மொத்தம் | | ,, |

13. வள்ளியிடம்

| | | |
|---|---|---|
| பால் விற்ற தொகை | 28 | ரூபாய் |
| நெய் விற்ற தொகை | 32 | ,, |
| காய்கறி விற்ற தொகை | 25 | ,, |
| முட்டை விற்ற தொகை | 15 | ,, |
| மொத்தம் | | ,, |

14. கோவிந்தனுக்குக் கிடைத்த மொத்தம்

| | | |
|---|---|---|
| துவரை விற்றதால் | 100 | ரூபாய் |
| நரிப்பயறு விற்றதால் | 120 | ,, |
| மொச்சை விற்றதால் | 80 | ,, |
| மொத்தம் | | ,, |

15. பலராமனுக்குக் கிடைத்த மொத்தம்

| | | |
|---|---|---|
| எருது விற்றது | 600 | ரூபாய் |
| கன்று விற்றது | 100 | ,, |
| கோழி விற்றது | 100 | ,, |
| மொத்தம் | | ,, |

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 2289
நன்கொடை எண்: 2289

# கழித்தல்

| | | | |
|---|---|---|---|
| 1. | கிடைத்த அவரைக்காய் | 8 | கிலோ |
| | சந்தையில் விற்றது | 6 | ,, |
| | மீதி | ___ | ,, |
| 2. | கிடைத்த முட்டைகள் | 10 | |
| | விற்றவை | 6 | |
| | மீதி | ___ | முட்டைகள் |
| 3. | கொண்டு போன பணம் | 10 | ரூபாய் |
| | செலவானது | 5 | ,, |
| | மீதி | ___ | |
| 4. | நடவேண்டிய நிலம் | 6 | ஏக்கர் |
| | நட்ட நிலம் | 3 | ,, |
| | பாக்கி | ___ | |
| 5. | விளைந்த நெல் | 9 | மூட்டை |
| | அரைத்தது | 2 | ,, |
| | மீதி | ___ | |
| 6. | காய்கறி விற்ற விலை | 20 | ரூபாய் |
| | பயிரிடச் செலவு | 5 | ,, |
| | ஆதாயம் | ___ | ,, |
| 7. | ஆடு விற்ற விலை | 80 | ரூபாய் |
| | வாங்கின விலை | 60 | ,, |
| | ஆதாயம் | ___ | ,, |

| | | | |
|---|---|---|---|
| 8. | தோட்டத்தில் நட்ட தென்னங்கன்றுகள் | 50 | |
| | பிழைத்தவை | 45 | |
| | பட்டுப்போனவை | | |
| 9. | பட்டியில் இருந்த ஆடுகள் | 100 | |
| | விற்ற ஆடுகள் | 65 | |
| | மீதி | | |
| 10. | கோழிப் பண்ணையில் இருந்த கோழிகள் | 200 | |
| | விற்றவை | 170 | |
| | மீதி | | |
| 11. | பசு விற்ற விலை | 400 | ரூபாய் |
| | வாங்கின விலை | 345 | ,, |
| | ஆதாயம் | | ,, |
| 12. | மக்காச்சோள வருமானம் | 600 | ரூபாய் |
| | முட்டு வழிச் செலவு | 160 | ,, |
| | லாபம் | | ,, |
| 13 | வாங்கியில் போட்ட தொகை | 1200 | ரூபாய் |
| | பயிர்ச் செலவுக்கு எடுத்தது | 650 | ,, |
| | மீதி | | ,, |
| 14. | கரும்பு வருமானம் | 1600 | ரூபாய் |
| | முட்டு வழிச் செலவு | 460 | ,, |
| | லாபம் | | ,, |
| 15. | நெல் வருமானம் | 2200 | ரூபாய் |
| | முட்டு வழிச் செலவு | 780 | ,, |
| | லாபம் | | ,, |

**பாடம் 17**

# பெருக்கல்

1. ஒரு லிட்டர் பாலின் விலை 1 ரூபாய்
   3 லிட்டர் பாலின் விலை $1 \times 3 =$

2. 1 லிட்டர் நல்லெண்ணெயின் விலை ரூ. 3
   2 லிட்டர் நல்லெண்ணெயின் விலை $3 \times 2 =$

3. 1 வாழைப்பழம் 6 பைசா
   3 வாழைப்பழம் $6 \times 3 =$

4. ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெயின் விலை ரூ. 5
   3 லிட்டரின் விலை $5 \times 3 =$

5. ஒரு மீட்டர் சட்டைத் துணியின் விலை ரூ. 3.
   3 மீட்டரின் விலை $3 \times 3 =$

6. கோழியின் விலை ரூ. 6
   4 கோழிகளின் விலை $6 \times 4 =$

7. ஓர் ஏர்க் கூலி ரூ. 5
   6 ஏர்களுக்குக் கூலி $5 \times 6 =$

8. மாதம் ஒன்றுக்கு வீட்டுக்குத் தேவையான உளுந்து 6 லிட்டர்
   4 மாதங்களுக்குத் தேவையான உளுந்து $6 \times 4 =$

9. ஒரு மாதத்திற்கு வேண்டிய சோளம் 40 லிட்டர்
   6 மாதத்திற்குத் தேவையான சோளம் $40 \times 6 =$

10. ஓர் ஏக்கர் நெல் பயிரிட முட்டு வழிச் செலவு ரூ. 200
    3 ஏக்கர் பயிரிட $200 \times 3 =$

11. மாதம் ஒன்றுக்கு வேண்டிய துவரை 5 லிட்டர்
12 மாதங்களுக்குத் தேவையான துவரை 5 × 12 =

12. வீட்டு வாடகை மாதம் ஒன்றுக்கு ரூ. 15
மூன்று மாதங்களுக்கு வாடகை 15 × 3 =

13. ஒரு கோழி முட்டையின் விலை 25 பைசா
4 முட்டைகளின் விலை 25 × 4 =

14. ஒரு கிலோக் கத்தரிக்காயின் விலை 60 பைசா
2 கிலோக் கத்தரிக்காயின் விலை 60 × 2 =

15. ஒரு தேங்காயின் விலை 50 பைசா
5 தேங்காய்களின் விலை 50 × 5 =

16. வைக்கோல் புரி ஒன்றுக்கு 70 பைசா
6 வைக்கோல் புரிகளின் விலை 70 × 6 =

பாடம் 18

## வகுத்தல்

1. மொத்த வாழைப்பழம் 8
சமப்பங்கு பெற்றவர் 2 பேர்
ஒருவருக்கு $8 \div 2 =$

2. வாங்கிய கடலை விலை 6 ரூபாய்.
சமப்பங்கு பெற்றவர் 3 பேர்
ஒருவர் தரவேண்டுவது $6 \div 3 =$

3. வாங்கிய முட்டைகள் 12
சமப்பங்கு பெற்றவர் 4
ஒருவர் பங்கு $12 \div 4 =$

4. 5 ஆள் களை பறிக்கக் கூலி 10 ரூபாய்
1 ஆள் களை பறிக்கக் கூலி $10 \div 5 =$

5. வாங்கிய பருப்பு விலை 30 ரூபாய்
சமப்பங்கு பெற்றவர் 6 பேர்
ஒருவர் கொடுக்க வேண்டிய தொகை $30 \div 6 =$

6. வாங்கிய துணி 42 மீட்டர்
சமப்பங்கு பெற்றவர் 7 பேர்
ஒருவர் பங்கு $42 \div 7 =$

7. வாங்கிய புளி 80 கிலோ
சமப்பங்கு பெற்றவர் 8 பேர்
ஒருவர் பங்கு $80 \div 8 =$

8. வாங்கிய புளி விலை — 180 ரூபாய்
சமப்பங்கு பெற்றவர் — 9 பேர்
ஒருவர் கொடுக்க வேண்டிய
தொகை — 180 ÷ 9 =

9. வாங்கிய சட்டைத் துணி — 60 மீட்டர்
சமப்பங்கு பெற்றவர் — 10 பேர்
ஒருவர் பங்கு — 60 ÷ 10 =

10. வாங்கிய சட்டைத் துணி விலை — 88 ரூபாய்
சமப்பங்கு பெற்றவர் — 11 பெற்றவர்
ஒருவர் கொடுக்க வேண்டிய
தொகை — 88 ÷ 11 =


11. வாங்கிய துணியின் விலை — 108 ரூபாய்
சமப்பங்கு பெற்றவர் — 12 பேர்
ஒருவர் கொடுக்க வேண்டிய
தொகை — 108 ÷ 12 =

12. 100 அப்பளம் விலை — 3 ரூபாய்
50 அப்பளம் விலை — 3 ÷ 2 =
25 அப்பளம் விலை — 3 ÷ 4 =

13. பூசணிக்காய் விலை — ரூ. 1-50
சமப்பங்கு பெற்றவர் — 3 பேர்
ஒருவர் கொடுக்க வேண்டுவது — 1-50 ÷ 3 =

14. 9 முட்டை விலை — ரூ. 2-25
1 முட்டை விலை — 2-25 ÷ 9 =

15. 4 சிறுவருக்குக் கூலி — ரூ. 5-00
1 சிறுவனுக்குக் கூலி — 5-00 ÷ 4 =





### பாடம் 19

## லிட்டர்

முன்பு பாலைப் படிக் கணக்கில் வாங்கினோம்; இப்பொழுது லிட்டர் கணக்கில் வாங்குகிறோம். முன்பு, எண்ணெய், நெய் கூடப்படியில் அளந்து வாங்கினோம் ; இப்பொழுது லிட்டர் அளவுகளில் வாங்குகிறோம்.

பாரதம் முழுவதிலும் இதே அளவு. ஒரே மாதிரி அளவு சுலப மானது. இது, கணக்கிடுவதற்கு எளிது. ஒரு லிட்டரில் 1000 மில்லி லிட்டர் உண்டு. ஆகவே, லிட்டரில் பாதி 500 மில்லி லிட்டர். லிட்டரில் பத்தில் ஒரு பாகம் 100 மில்லி லிட்டர். இந்த அளவுகளிலும் வேண்டு வதை வாங்கலாம். கணக்கிடுவதில் குழப்பம் இராது.





பாடம் 20

## உணவு

உயிர் வாழ உணவு தேவை. உணவு பல வகை. நம் உணவில் பல சத்துச் சேர வேண்டும்.

உணவு போதும் அளவு கிடைக்க வேண்டும். எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். மலிவாகக் கிடைக்க வேண்டும். இதற்கு வழியென்ன ?

அதிக விளைச்சல் வேண்டும். அதற்கு உழைப்பு வேண்டும். எல்லோரும் பாடு பட வேண்டும். நிலம் இல்லாதவர்களும் உணவுப் பொருளை வீட்டுத் தோட்டத்தில் பயிரிடலாம். சுரை, பூசனி பயிரிடச் சிறு இடம் போதும். பருவத்தில் இவற்றைப் பயிரிடுவோம். பயிரிடச் சிறு இடம் போதும். பருவத்தில், இவற்றைப் பயிரிடுவோம். மேலும் இடம் இருந்தால், கீரை பயிரிடுவோம். அவரை, புடலை, வெண்டையும் விளைப்போம். வீட்டுக் காய்கறி சத்துள்ளன வாய் இருக்கும்.

தமிழ் நாட்டில் அறுபது லட்சம் வீடுகள் இருக்கலாம். அத்தனை வீடுகளிலும் காய்கறி பயிரிட்டால் பஞ்சம் இராது ; பட்டினி இராது ; பிணி குறையும்.

சிலர் எப்போதும் அரிசியே உண்பர். அவர்களும் ராகி, கம்பு, சோளம் சேர்த்து உண்பது நல்லது. நெய், பால், மோர் சேர வேண்டும். மிகுதியாகக் கீரை, காய்கறி உண்ண வேண்டும். பழமும் சிறந்த உணவு. நம் நாட்டில் பலர் உணவை இலையில் மிச்சப்படுத்தி எறிகின்றனர். இது தவறு. இதனால் உணவு நெருக்கடி அதிகமாகிறது. எனவே, அப்படி எறியக்கூடாது. உணவைப் பாழாக்கக் கூடாது.

விளைவைப் பெருக்குவோம். உணவைப் பாழாக்காமல் இருப்போம். எல்லோரும் உண்ண உதவுவோம்.



பாடம் 21

# சந்தை

அகரத்தில் வெள்ளிக்கிழமை தோறும் சந்தை கூடும். அக்கம் பக்கத்திலிருந்து மக்கள் வந்து கூடுவார்கள். பல வண்டிகள் சரக்கேற்றி வரும்; சிலர், தலைச்சுமையாகவும் எடுத்து வருவர். காலையிலேயே பல பொருள்களும் வந்து குவியும். ஒரு பக்கம் நவதானியங்கள், மற்றொரு பக்கம் கிழங்கு வகைகள், வெங்காய மூட்டைகள் தெரியும். காய்கறிக் குவியல்களும் காணப்படும். விற்பனை சுறுசுறுப்பாக இருக்கும்.

மந்தை பந்தையாய் ஆடுகள் வரும். அவைகளை ஒரு புறம் ஒதுக்கி நிறுத்துவார்கள். பல கறவை மாடுகளும் வரும்; ஜோடி ஜோடியாகக் காளை மாடுகள் வரும்; தரகர்கள் விலை பேசுவதில் கெட்டிக்காரர்கள். ஆகவே, மாடுகளைப் பார்த்து வாங்க வேண்டும். சுழிச் சுத்தம் பார்த்து ஆறுமுகம் ஒரு ஜோடி எருதுகள் வாங்கினார்.

வாரந்தவறாமல் வள்ளி சந்தைக்கு வருவாள். வீட்டில் விளைந்த பொருள்களைச் சந்தைக்கு எடுத்து வருவாள்; வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொள்வாள்.

சந்தைக்கு வர ஔவை ஆசைப்படுவாள்; சந்தைக்கு வந்ததும் வாராததுமாய், பலூன் வாங்குவாள்; வாழைப்பழம் வாங்குவாள்; வளையல் வாங்குவாள்.

வாரந்தோறும் சந்தை கூடுவது மக்களுக்கு வசதி. வேண்டுவன எல்லாம் ஒரே இடத்தில் கிடைக்கும்.

சந்தையை அசுத்தப்படுத்தக்கூடாது. அசுத்தப்படுத்தினால் நோயையும் வாங்கிக்கொண்டு போவோம். எனவே, எச்சில் துப்பக் கூடாது. சிறுநீர் கழிக்கக்கூடாது. துப்புரவே துணை.

பாடம் 22

# திருவள்ளுவர்

திருவள்ளுவர், திருக்குறள் இயற்றியவர். திருக்குறள் நீதி நூல். அது பொது நூல்; பல காலத்திற்கும் பொருந்தும் நூல்; பல நாட்டினரும் போற்றும் நூல்; வாழ்க்கைக்கு வழி காட்டும் நூல்.

திருக்குறள் முப்பால் எனப்படும். பால் என்பது பகுப்பு. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்பவை முப்பால். அது நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஓவ்வோர் அதிகாரமும் பத்துக் குறள்கள் உடையது. எனவே, ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்கள் உண்டு.



திருக்குறள் பொருள் ஆழம் உடையது. அது சொல் நயம் கொண்டது. அது சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது. அது கடமைகளை உணர்த்தும் நூல்.

திருக்குறள் மனிதப் பண்பிற்கு முதலிடம் அளிப்பது. அது அறத்தைக் காட்டுவது; இன்பத்தை விளக்குவது; உழவின் மேம்பாட்டைச் சுட்டிக் காட்டுவது; நேர்மையாகப் பொருள் சம்பாதிக்கச் சொல்லுவது; சிக்கனத்தை வலியுறுத்துவது. ஒழுக்கத்தைப் போற்றுவது; அரசின் கடமைகளை அறிவுறுத்துவது; கல்வியின் தேவையை வலியுறுத்துவது.

திருக்குறள் தமிழில் எழுதப்பட்டது; இன்று பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. திருவள்ளுவர் உலகப் புகழ் பெற்றவர். இவர் உருவம் நம் அஞ்சல் தலையில் வெளி வந்தது.

நாம் திருக்குறள் கற்போம்: குறள்வழி நிற்போம்; நல்வாழ்வு வாழ்வோம்.



பாடம் 23

# ஐ. ஆர். 8 நெல்

ஐ. ஆர். 8 நெல் அமோக விளைச்சல் தரும். இது சம்பாப் பருவத்திற்கும் ஏற்றது.

நாற்றங்காலை நன்கு உழுது பண்படுத்த வேண்டும்.

ஏக்கருக்கு 10 செண்டு நாற்றங்கால் போதும். அதை 10 பாத்திகளாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு பாத்தியும் 1 செண்ட் ஆகும்.

18 லிட்டர் தண்ணீரில் 10 கிராம் ஈர செரசானையும் ஸ்ட்ரெப்டோ சைக்ளினையும் கலக்க வேண்டும். அதில் 15 கிலோ ஐ. ஆர். 8 விதையை 36 மணி நேரம் ஊறப்போட வேண்டும். அப்புறம் நாற்று விடவேண்டும்.

நாற்றுப் பறிப்பதற்கு 10 அல்லது 12 நாள்களுக்கு முன்பு மேல் உரம் இடவேண்டும். 25 கிலோ அம்மோனியம் சல்பேட்டோ, அல்லது 10 கிலோ யூரியாவோ போதும்.

விதைத்த 26—28 நாள்களுக்குப் பிறகு நாற்றைப் பறிக்க வேண்டும். வேர் அறுபடாமல் கவனமாகப் பறிக்க வேண்டும். நாற்றைத் தரையிலோ கழியிலோ அடிக்கக் கூடாது. நாற்றை நாற்றுல் கட்டுவது வீண்.

நடவு நிலத்தை ஆழ உழ வேண்டும். இரும்புக் கலப்பையால் உழுவது சிறந்தது. சேறடித்து உரத் தழைகளை நன்றாக அழுத்தி விடவேண்டும். வரப்புகளின் ஓரத்தைக் கழிக்க வேண்டும். முதலி லேயே வரப்பை மெழுகிவிட வேண்டும் ; வளைகளை அவசியம் அடைக்கவேண்டும். இது எலியின் தொல்லையைத் தடுக்கும்.

ஒரு ஏக்கருக்கு 5 வண்டித் தழை உரம் தேவை ; பதிலாக 10 அல்லது 12 வண்டித் தொழு உரமோ காம்போஸ்டு உரமோ போடலாம். கடைசி உழவில் 27 கிலோத் தானியச் சத்தும் 10 கிலோச் சாம்பல் சத்தும் இட வேண்டும். நடவின்போது 25 கிலோத் தழைச் சத்துத் தேவை.

நாற்றை, வரிசைக்கு வரிசை 20 செ. மீ. இடைவெளியில் நட வேண்டும். வரிசையில் பயிருக்குப் பயிர் 10 செ. மீ. இடைவெளி இருக்கவேண்டும். நட்ட 25 ஆம் நாள் 9 கிலோத் தழைச்சத்து இட வேண்டும். 40 ஆம் நாள் 6 கிலோத் தழைச்சத்துப் போதும்.

15ஆம் நாள் களையெடுக்க வேண்டும். 40 ஆம் நாள் இரண் டாம் முறை களை எடுக்க வேண்டும்.

பயிர் பச்சை கட்டியதும், வேண்டும் அளவு தண்ணீர் கட்டி வைக்கவேண்டும். நல்ல வடிகால், நல்ல பலன் தரும்.

பயிர் பாதுகாப்பு முறையைக் கேட்டுக் கையாளவேண்டும். இவ்வாறு பயிர் செய்தால் நல்ல விளைச்சல் உண்டு. உழைப்புக்குப் பெரும் பலன் உண்டு.

பாடம் 24

# தீவிர விவசாயப் பகுதித் திட்டம்

(Intensive Agricultural Area Programme)

..............................மாவட்டம்

விவசாயியின் கைவசக் குறிப்பு

**(Farmer's Card)**

பண்ணைத்திட்ட எண் :

கூட்டுறவு சங்கத்தின் அங்கத்தினர் எண் :

1. விவசாயியின் பெயர்—
2. தகப்பனார் பெயர்—
3. தபால் விலாசம்—
4. வட்டாரத்தின் பெயர்—
5. கிராம நல ஊழியர் தொகுதி—
6. சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் பெயர்—
7. ஆண்டுக் கடன் அளவு மனுவில் கொடுக்கப்பட்ட எண்—
8. தீவிர விவசாயப் பகுதித் திட்டத்தில் பங்கு கொண்ட வருடம்—

# நேர்த்திகள்-தேவைப் பொருள்கள் சம்பந்தமான கால அட்டவணை

| நேர்த்திகள் | பயிர் : | | பரப்பு : | | பயிர் : | | பரப்பு : | | பயிர் : | | பரப்பு : | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 1 | 2 | 3 | 4 | 1 | 2 | 3 | 4 |
| (1) விதையும் விதைப்பும்— | | | | | | | | | | | | |
| (அ) பொறுக்கு விதை | | | | | | | | | | | | |
| (ஆ) விதையுடன் மருந்து கலத்தல் | | | | | | | | | | | | |
| (இ) விதைப்பு | | | | | | | | | | | | |
| (ஈ) நடவு | | | | | | | | | | | | |
| (2) உரமும் உரமிடுதலும்— | | | | | | | | | | | | |
| (அ) தழைச்சத்து | | | | | | | | | | | | |
| (ஆ) தானியச்சத்து | | | | | | | | | | | | |
| (இ) சாம்பல் சத்து | | | | | | | | | | | | |
| (ஈ) கலப்பு உரம் | | | | | | | | | | | | |
| (3) பயிர் பாதுகாப்பு— | | | | | | | | | | | | |
| (அ) நாற்றுக்கு | | | | | | | | | | | | |
| (ஆ) பயிருக்கு | | | | | | | | | | | | |

குறிப்பு :— 1. நேர்த்திகள் செய்ய வேண்டிய காலம்.
2. நேர்த்திகள் செய்யப்பட்ட காலம்.
3. பொருள்கள் தேவைப்படும் அளவு.
4. உபயோகிக்கப்பட்ட பொருள்களின் அளவு.

பத்திகள் 1, 3 இவற்றைப் பண்ணைத் திட்டம் தயார் செய்யும்பொழுதே நிரப்பி விவசாயியிடம் கொடுக்கவும்.

(1) தொடர்பு நடவடிக்கைகள்—

விவசாயியை இத்திட்ட சம்பந்தமாகச் சந்தித்த தேதிகள்

(2) சான்றிதழ்—

இந்த அட்டவணையில் கண்ட விவரப்படி பொருள்கள் சரியான அளவில் சரியான காலத்தில் விவசாயிக்குக் கொடுக்கப் பட்டதற்கும் அவைகள் சரியான முறையில் உபயோகப்படுத்தப்பட்டதற்கும் இச் சான்றிதழ் கொடுக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| கிராம நல ஊழியர். | விவசாய விஸ்தரிப்பு அலுவலர். | கூட்டுறவு விஸ்தரிப்பு அலுவலர். |

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 2289
நன்கொடை எண்: 2289
அவ்வை தி.க. சண்முகம் ... தமிழியல்